பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 20 செவ்வாய்க்கிழமை 05.08.2025 கதிர் 269

இனி அது ரகசியம் அல்ல!

ஒரு பக்கத்தில் பாதாள உலகக் கும்பல்கள் தங்களுக்குள் அடிபட்டுக்கொண்டு துப்பாக்கிகளால் சுட்டுச்செத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆளும்தரப்பு அதுபற்றிஅக்கறை ☞ 2

## இலங்கை இந்திய ஒப்பந்தங்களை எதிர்த்த இரு வழக்குகள் தள்ளுபடி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) செல்லுபடியற்றது என அறிவித்து உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன.

நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு, இந்த மனுக்கள் ஊடாக எந்த அடிப்படை வழக்கு விடயமும் முன்னிறுத்தப்படவில்லை என்று கூறி இந்த இரண்டு மனுக்களையும் தள்ளுபடி ☞ 3

## மீன்பிடிப் படகுகள் கணக்கெடுப்பு 10 வருடங்களின் பின் தொடக்கம்

பத்து வருடங்களுக்கும் மேலான காலத்தின் பின்னர் நாட்டின் மீன்பிடித்துறையின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் டிஜிட்டல்மயமாக்கலை இலக்காகக் கொண்ட 'தேசிய மீன்பிடி படகுகள் கணக்கெடுப்பு - 2025', கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் பிரதி அமைச்சர், ரத்ன கமகே ஆகியோரின் தலைமையில் நேற்று பாணந்துறை மீன்பிடித் ☞ 3

# 309 கொள்கலன் பற்றிய விசாரணை அறிக்கை மாதம் கடந்தும் அநுரவிடம் தூங்குவது ஏன்?

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ரஹ்மான் சாடல்

சுங்கத்தில் இருந்து எந்தவித பரிசோதனையும் இன்றி விடுவிக்கப்பட்ட 309 கொள்கலன்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள அரசுத் தலைவரால் நிமிக்கப்பட்ட குழுவின் விசாரணை அறிக்கை அரசுத் தலைவருக்கு கையளிக்கப்பட்டு ஒரு மாதகாலம் கடந்துள்ள போதும் அதனை அரசுத்தலைவர் வெளியிடாமல் வைத்துக்கொண்டிருக்கிறார். இந்த அறிக்கை ஆளும்தரப்புக்குப் பாதிப்பு என்பதாலேயே நாடாளுமன்றத்துக்கு கூட அதனைச் சமர்ப்பிக்காமல் இருக்கிறது. அத்துடன் சுங்கத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 400 உப்பு கொள்கலன்களில் 6 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. இவை யாருடையது என்பதை அரசம் தெரிவிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

சுங்கத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 400 உப்பு கொள்கலன்கள் தொடர்பில் கருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

சுங்கத்தில் இருந்து எந்தவித பரிசோதனையும் இல்லாமல் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் ☞ 3

## இஸ்ரேலியர்களை வர அனுமதிப்பதால் எதிர்காலத்தில் பெரும் அழிவுகள் வரும்

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. எச்சரிக்கை

இஸ்ரேலியர்களுக்கு இலங்கைக்கு வருவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் அழுத்தமாகவோ அல்லது நிபந்தனையாகவோ இருக்கலாம். ஆனால் இஸ்ரேலியர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதால் எதிர்காலத்தில் பெரும் அழிவுகளை சந்திக்க நேரிடும் என அரசத்தை எச்சரிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ☞ 3

# மாகாண சபைத் தேர்தல் குறித்து ஆராய சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டவேண்டும்

### நாடாளுமன்ற உறுப்பினர் தொலவத்த வலியுறுத்து

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து ஆராய்வதற்கு அரசுத் தலைவர் சர்வக்கட்சித் தலைவர் மாநாட்டை நடத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு. அரசியல் செல்வாக்கு பலவீனமடையும் என்பதற்காக மாகாணசபைத்தேர்தலை நடத்தாமலிருக்க ஆளும்தரப்பு முயற்சிக்கிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி.தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாணசபை முறைமை அமுல்படுத்தப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணி மாகாணசபை முறைமைக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்து இந்த நாட்டில் பெரும் இனகலவரத்தை ஏற்படுத்தியது.

மாகாணசபைத் தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் பிற்பட்ட காலத்தில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு, நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்கள். காலவோட்டத்தின் பின்னர் மாகாணசபை முறைமையில் தேவைப்பாடு உணரப்பட்டுள்ளது.

மாகாணசபை விவகாரத்தில் எதிர்கட்சிகளின் நிலைப்பாடு தற்போது ஒருமித்ததாக காணப்படுகிறது. ஆகவே தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை ஆளும்தரப்பு மேற்கொள்ள வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து அரசுத் தலைவர் சர்வக்கட்சித்தலைவர் மாநாட்டை ☞ 2

# செம்மணி - 135

### நேற்று மட்டும் 5

செம்மணி-சித்துபாத்தி மனிதப்புதைகுழியில் திங்கட்கிழமை (4) மேலும் 05 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.





இதுவரை அங்கு 135 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 126 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் ☞ 2

## ஐ.நாவின் சான்றுகள் சேகரிக்கும் அலுவலகம் செம்மணிக்கு வந்து ஆதாரம் திரட்டவேண்டும்

### மனிதப் புதைகுழிகளை நேரில் பார்த்த பின்னர் சுமந்திரன் வலியுறுத்து

தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமைக்கான சான்றுகள் செம்மணியில் இருந்தே ஆரம்பமாகின்றன எனத் தோன்றுகின்றது. ஆகவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நடந்த மீறல்கள் தொடர்பான சான்றுகளைச் சேகரிக்கின்ற பொறிமுறை (ஒஸ்லாப்) ஒன்று உள்ளது. அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்களை இங்கு வரவழைத்து செம்மணி விடயங்கள் தொடர்பிலான சான்றுகளையும் சேகரிக்க வேண்டும். இங்கு நடந்த விடயங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார். ☞ 2

## துப்பாக்கிச் சூடுகளைத் தடுத்துநிறுத்த ஆளும்தரப்பு எதுவும் செய்யவில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கடத்தல்காரர்கள் இயல்பாகத் துப்பாக்கிச்சூடுகளை நடத்துவதற்கான சூழல் காணப்படுகிறது. அரச அதிகாரிகளையும், விவசாயிகளையும் விமர்சிக்கும் ஆளும்தரப்பு இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகக் குறைந்தது நாடாளுமன்றத்திலேனும் இது தொடர்பில் பேசுவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். ☞ 3

## ரணிலின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து அவரது செயலாளரிடம் வாக்குமூலம் பதிவு

### 6 மணி நேரமாகத் துருவித் துருவி விசாரணை

ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவராகப் பதவி வகித்த காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைய முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக நேற்று அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே இந்த ☞ 3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொள்வதில்லை. அல்லது ஆளும்தரப்பால் அதனைத் தடுக்க முடியவில்லை. இதுதான் இப்படியென்றால்மறுபுறத்தில்தமிழ்திரைப்படப் பாணியில்போதைப்பொருள்கடத்தல்காரர்கள் இப்போதெல்லாம் பொலிஸாரை தொலைபேசியில் தொடர்புகொண்டு மிரட்டவும் தொடங்கி விட்டார்கள். இப்படித் தானும் மிரட்டப்பட்டார் என்று தெரிவித்துப் பின்னர் மாட்டிக்கொண்டு கம்பி எண்ணும் பொலிஸ் அதிகாரி ஒருவர் இருக்கிறார் என்பது தனிக் கதை. ஆனால் உண்மையிலேயே கடத்தல்காரர்கள் பொலிஸ் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு மிரட்டியிருக்கிறார்கள் என்கின்றன பொலிஸ் வட்டாரங்கள்.

இப்படித் துணிச்சலோடு பொலிஸ் அதிகாரியையே தொலைபேசியில் தொடர்புகொண்டு மிரட்டியிருப்பவர் கெஹெல்பத்தர பத்மே என்று அழைக்கப்படும் மண்டினு பத்மசிறி பெரேரா என்கிற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் ஒன்றின் தலைவர். கொழும்பு மேற்கு, வடக்கு பிரிவின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான லிண்டன் டி சில்வாவையே இவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு மிரட்டியிருக்கிறார்.

“உங்களுக்கும்பிள்ளைகள்இருக்கிறார்கள். குடுபத்தோடுஒழித்துவிடுவோம்“என்றுபத்மே மிரட்டியிருக்கிறார் என்கின்றன பொலிஸ் வட்டாரங்கள். “கொல்லச் சொல்லி ஆர்டர் கிடைத்துவிட்டது. என்ன செய்கிறோம் என்று மட்டும் பாருங்கள்‘‘ என்றுவேறு சொல்லியிருக்கிறாராம்.

கெஹெல்பத்தர பத்மே மட்டுமல்ல கமாண்டோ லசிந்த மற்றும் தருண் என்ற நபர் என மாறி மாறி அழைப்பெடுத்து பொலிஸ் அதிகாரிக்கு மிரட்டல் விடுத்திருக்கிறார்களாம். அதற்கான முக்கியமான காரணம் கெஹெல்பத்தர பத்மேயின் சொகுசு விடுதி ஒன்றில் பொலிஸார் அண்மையில் கடும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தமைதான்.

கெஹெல்பத்தர பத்மேவின் நெருங்கிய கூட்டாளி ஒருவர் ஓகஸ்ட் 3 கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், கெஹெல்பத்தர பத்மேவுக்குச் சொந்தமான கெஹெல்பத்தர பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலுக்குள் மேற்கு வடக்கு குற்றப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு நுழைந்து சோதனை செய்தது. இந்த நடவடிக்கைதான் கடத்தல்காரர்களைக் கோபமடையச் செய்துள்ளது. இதுவரை யாரும் தன்னுடைய இடத்திற்குள் இப்படி நுழைந்ததில்லை என்றும், அப்படி நுழைந்ததற்காகவே லிண்டன் டி சில்வாவைக் கொல்வோம் என்று மிரட்டியிருக்கிறார்கள்.

போதைப் பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவோம், போதைப் பொருள் வர்த்தகப் பெரும் புள்ளிகளைக் கைது செய்வோம் என்றெல்லாம் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகச் சீத்துவம் இந்தவாறாக வந்து நிற்கின்றது. நல்ல மாற்றம்தான் போங்கள்....!.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## மாகாண சபைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தவேண்டும். தமிழ்மக்களுக்குவழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புஆளும்தரப்த்துக்குஉண்டு.அரசியல் செல்வாக்கு பலவீனமடையும் என்பதற்காக மாகாண சபைத் தேர்தலை நடத்தாமலிருக்க ஆளும்தரப்ம் முயற்சிக்கிறது.

மாகாணசபை தேர்தல் தொடர்ந்து இழுபறிநிலையில் உள்ளது, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றி எவ்வித நடவடிக்கைகளும்எடுக்கப்படவில்லை.மாறாக முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் சட்டமூலத்தைதயாரித்துள்ளது.இது முற்றிலும் தவறானது என்றார்.

## ஐ.நாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின்போது அரசுத் தலைவர் சட்டத்தரணி சுமந்திரன் நேரில் பார்வையிட்டார். அவர் சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவது இது இரண்டாவது முறை. புதைகுழிகளைப் பார்வையிட்ட பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

செம்மணி மனிதப் புதைகுழி உள்ள பகுதியில் ‘ஸ்கானிங்‘ நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஸ்கானிங் தரவுகள் ஆராயப்பட்டு வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் இருக்கின்றனவா என்பது அறியப்படும். அப்படியிருந்தால் அங்கும் அகழ்வுகள் மேற்கொள்ளப்படும்.

நாளை (இன்று) செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தடயப் பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் 130க்கும் மேற்பட்ட மனித என்பு தொகுதிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாளும் மனித என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்ட வண்ணமே உள்ளன.

கிருஷாந்தி கொலை வழக்குக் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச 1999ஆம் ஆண்டு வழங்கிய சாட்சியத்தின் பிரகாரம் முதலில் 15 என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து தற்போது மேற்கொள்ளப்படும் அகழ்வு பணிகளின் போது நூற்றுக்கும் மேற்பட்ட மனித என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இராணுவ உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கமைய 300 தொடக்கம் 400 வரையான உடல்கள் புதைக்கப்பட்டதாக 1999களில் சோமரத்ன ராஜபக்ச கூறிய கருத்துக்களுடன் இப்போதைய மனித என்புத் தொகுதிகள் ஒத்துப்போகின்றன.

உண்மையைக் கண்டறிதல் பொறிமுறையில், இலங்கையில் நிலத்துக்குக் கீழேதான் பல உண்மைகள் புதைந்திருக்கின்றன. ஆகவே, மனிதப் புதைகுழிகள் தோண்டப்படுகின்ற விடயம் உண்மையைக்கண்டறியும்செயல்முறையில் மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்றது.

செம்மணிப்புதைகுழிமழுங்கடிக்கப்படுமா என பலருக்குச் சந்தேகங்கள் உள்ளன. எனவேதான் அகழ்வுப் பணிகளை வெளிப்படைத் தன்மையோடு மேற்கொள்ளப்படவேண்டும் என்று நாம் தொடக்கம் முதலே கூறி வருகின்றோம்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேசமன்றுக்குசாட்சியமளிக்கத்தயாராக இருப்பதாக கிருஷாந்தி படுகொலை வழக்கின் முக்கிய குற்றவாளி என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ச சொன்னதாகப்பத்திரிகைகள்வாயிலாகஅறிந்து கொண்டோம். அது உண்மை எனில் அவர் சர்வதேச மன்றில் சாட்சியம் அளிப்பதற்கு நாம் வழி செய்து கொடுக்கவேண்டும். இது ஒரு திருப்புமுனையான சந்தர்ப்பமாகவே நாங்கள் கருதுகின்றோம்.

தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கான சான்றுகள் இங்கிருந்தே ஆரம்பமாகின்றன எனத் தோன்றுகின்றன. ஆகவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஒஸ்லாப் என்கின்ற சான்றுகளைச் சேகரிக்கின்ற பொறிமுறை ஒன்று உள்ளது. அதை வரவழைத்து இங்கு நடந்த விடயங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படவேண்டும்.

அரச அதிகாரிகள் அல்லது அரச திணைக்களங்கள் இதிலே சற்றுப் பின்னடிப்பதாகச்சந்தேகங்கள்சிலசம்பவங்கள் மூலமாகஎழுகின்றன. எனவே, முழுமையான சர்வதேசமேற்பார்வையோடுசெம்மணிகுறித்த உண்மைகள்வெளிக்கொணரப்படவேண்டும். இதற்கென சர்வதேசப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

பழையசெம்மணிவழக்கானதுகொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதனை மீள யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றி புதிய செம்மணி வழக்கோடு சேர்த்து விசாரிக்கப்படவேண்டும் -- என்றார்.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30ஆவது நாளாக நேற்று யாழ்ப்பாண நீதிவான் ஆனந்தராஜாவின் முன்னிலையில், தொல்லியல்துறைபேராசிரியர்ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்டவைத்திய அதிகாரிபிரணவன்ஆகியோரின்பங்கேற்போடு முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வுப் பணிகளை அரசுத் தலைவர்சட்டத்தரணிசுமந்திரன்இரண்டாவது தடவையாக நேரில் பார்வையிட்டார்.

# செப்டெம்பர்: டிஜிட்டல் பொருளாதார மாதம்

## அமைச்சு தீர்மானம்

எதிர்வரும் செப்டம்பர் மாதத்தை டிஜிட்டல் பொருளாதார மாதமாக அறிவிக்க டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசுத் தலைவர் அனுர குமார திசாநாயக்கவின் ஆலோசனைக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும்டிஜிட்டல்பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே இதன் நோக்கமென டிஜிட்டல்பொருளாதார அமைச்சின்செயலாளர் வருண ஸ்ரீ தனபால தெரிவித்தார்.

செப்டம்பர் மாதத்தில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில்பொதுமக்களுக்குவிழிப்புணர்வை ஏற்படுத்துதல், டிஜிட்டல் பொருளாதார கொள்கை மற்றும் அதன் செயன்முறைகளை உருவாக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தவறான தரவுகள் அடிப்படையில் மின் உற்பத்தி நிலைய அனுமதி

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

தவறான தரவுகளின் அடிப்படையில் சஹஸ்தனவி LNG மின் உற்பத்தி நிலையத்திற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சஹஸ்தனவி மின் உற்பத்தி நிலைய மோசடிதொடர்பாக விடுத்த அறிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஹஸ்தனவிதிரவப்படுத்தப்பட்ட இயற்கை வாயு (LNG) மின் உற்பத்தி நிலையத்தை நடத்துவதற்கு அரசம் அமைச்சரவை அனுமதியைப் பெற்றுள்ளது. இந்த அமைச்சரவைப்பத்திரத்தில்குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய தரவுகளில் தவறான விபரங்கள் காணப்படுகின்றன. இந்தப் பத்திரத்தின் படி, ஒரு அலகு மின்சாரத்தின் விலை ரூ.20.15 ஆகும். இந்தக் கணக்கீடு, ஒரு லீற்றர் டீசலின் விலை ரூ.110 ஆகவும், ரூபாயின் மாற்று விகிதம் ரூ.195 ஆகவும் இருப்பதை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டபோது, ஒரு லீற்றர் டீசலின்விலைரூ.286ஆகவும், ஒருடொலரின் மாற்று விகிதம் ரூ.300 ஆகவும் இருந்தன. தவறான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்து, சஹஸ்தனவி மின் உற்பத்தி நிலையத்திற்கு அனுமதி பெறப்பட்டு, நாட்டிற்கும் நுகர்வோருக்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். இது மிகவும் ஊழல் நிறைந்த செயல்முறை.

இந்தப் பிழை குறித்து, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு எரிசக்தி அமைச்சின் செயலாளருக்குஎழுத்துமூலம்தெரிவித்துள்ளது.

ஒரு அலகு மின்சாரத்தின் விலை மூன்று சந்தர்ப்பங்களில் ரூ.35.81, ரூ.43.25, மற்றும் ரூ.72.11 ஆக இருக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இங்கு கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால், விலை அலகுகளுக்கும் அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட தரவுகளுக்கும் இடையிலான தவறுகள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், 2025 மார்ச் இறுதியில்இந்தத்திட்டத்தைமுன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

தவறான தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டபோது, அமைச்சரவையில் இருந்த ஏனைய அமைச்சர்கள் இது குறித்து அறியாமல் இருந்தார்களா என்பது கேள்விக்குறியாக உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எனவே, இந்த அமைச்சரவைப் பத்திரம் தவறான தகவல்களையும் தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டுதயாரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இந்தத் தவறைச் சுட்டிக்காட்டியபோதிலும், அதனைக் கருத்தில் கொள்ளாமல், அவர்கள் விரும்பியவாறு செயற்பட்டு, நாட்டிற்கும் நுகர்வோருக்கும் கடுமையான இழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி, மற்றும் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனையதரப்புகளுடன்கலந்துரையாடி, இந்தத் தவறினால் நாட்டிற்கு ஏற்படும் இழப்பைத் தடுக்க, ஜனநாயக ரீதியில் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மின்சார சபையின் தலைவரும், ஸிம்ஸி நிறுவனத்தின் தலைவரும் ஒரே நபராக இருப்பதால், இங்கு நலன்கள் முரண்பாடு காணப்படுகிறது. இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கும்போது, இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதுவேண்டுமென்றேசெய்யப்பட்ட தவறாகும். எனவே, இப்போதாவது இது குறித்து மறு பரிசீலனை செய்து, சஹஸ்தனவி மின் உற்பத்தி நிலையத் திட்டத்திற்குப் பதிலாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்என எதிர்க்கட்சித்தலைவர் மேலும் வலியுறுத்தினார்.

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் பொலிஸ் தொடர்பில் பாரிய பிரச்சினை காணப்படுகிறது. பாதாள உலகக் குழுவினருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் இயல்பாக துப்பாக்கிச்சூடுகளை நடத்துவதற்கான சூழல் காணப்படுகிறது. பாதாள உலகக் குழுக்களால்இவ்வாண்டுக்குள்இதுவரையான காலப்பகுதியில் 73 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களால் 41 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது ஆபாயம் மிக்க வளர்ச்சியாகும்.

பொதுமக்கள்மத்தியில்மிகச்சாதாரணமாக குற்றச் செயல்களும் கொலைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் ஆளுந்தரப்பில் ஒருவர் கூட இதைப் பற்றி பேசுவதில்லை. எவராவது எந்த சந்தர்ப்பத்திலாவது பொலிஸார் பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியிருக்கின்றனர்? இது தொடர்பில் எவரும் வாய் திறப்பதே இல்லை.

கடந்த அரசளின் ஆட்சியில் இவ்வாறு இடம்பெற்றிருந்தால் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட தரப்பினர் வீதிக்கிறங்கி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருப்பார்கள். பொலிஸ்மா அதிபர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் போன்றோர் பதவி விலகி அரசமும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பார்கள். ஆனால் இன்று என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? ஜே.வி.பி.யின் பழைய தலைவர்கள் அல்லவா தற்போது ஆட்சியிலிருக்கின்றனர்?

பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்த வேண்டிய தேவை அரசத்துக்கு இல்லை. அதனால் தான் அவர்கள் இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அமைச்சர் லால் காந்த அரச துறையினர், விவசாயிகள் என அனைவரையும் கடுமையாகவிமர்சித்துக்கொண்டிருக்கின்றார். ஆனால் அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போதைப்பொருகள் கடத்தல்காரர்கள் தொடர்பிலோ, பாதாள உலகக் குழுக்கள் தொடர்பிலோ பேசவில்லை.

லால் காந்த மாத்திரமல்ல, அரசத்திலுள்ள எவரும் இவை தொடர்பில் பேசுவதில்லை. மாறாக பொலிஸாரின் இயலாமையை மறைத்து அவர்களை பாதுகாப்பவர்களாவே செயற்படுகின்றனர். இது உண்மையில் வெட்கப்படவேண்டிய விடயமாகும். தேசபந்து தென்னகோனை பதவிநீக்கும்யோசனையை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்கும். தேசபந்து தென்னகோன் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தகுதியற்றவர் என்பதை இந்த அரசத்துக்கு முன்னதாகவே நாம் தெரிவித்து விட்டோம்.

எனவே அவரை பதவி நீக்கும் யோசனை நிச்சயம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். ஆனால் தேசபந்துவரைப் போன்று மேலும் பலர் இலங்கை பொலிஸில்

தொடர்ச்சி 3ம் பக்கம்....

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளனர். தேசபந்து விவகாரம் அவர்களுக்கு ஒரு சிறந்த பாடமாகும். தேசபந்துவைப் போன்று அரசியலுக்காக அதிகாரத்தைப் பயன்படுத்துவபவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும். மறுபுறம் நேர்மையான அதிகாரிகள் பாராட்டப்பட வேண்டும் என்றார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம் தொடர்பில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக செயலாளர் சென்ட்ரோ பெரேராவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று 6 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்திருந்தது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 2022 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 23 வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளதாகவும் இதற்காக சுமார் 1 பில்லியன் ரூபா வரையில் ஆளும்தரப் நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் அண்மையில் நாடாளுமன்றத்தில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்களை வெளிப்படுத்தியிருந்தார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 2022 ஆம் ஆண்டு 4 வெளிநாட்டு பயணம், 2023 ஆம் ஆண்டு 14 வெளிநாட்டு பயணம், 2024 ஆம் ஆண்டு 05 வெளிநாட்டு பயணம் என்ற அடிப்படையில் இக்காலத்துக்குள் 23 வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளார்.

இக்காலப்பகுதியில் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்களின் போது அவருடன் பலர் ஆளும்தரப்முறை விஜயத்தில் பங்கேற்றுள்ளனர்.

2022ஆம் ஆண்டு 63 பேர், 2023 ஆம் ஆண்டு 252 பேர், 2024 ஆம் ஆண்டு 111 பேர் என்ற அடிப்படையில் இக்காலப்பகுதியில் மாத்திரம் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆளும்தரப் செலவில் 436 பேர் வெளிநாட்டு பயணங்களில் பங்கேற்றுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க 2022 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆளும்தரப்முறை பயணத்துக்கு 129 மில்லியன் ரூபாய்,

2023 ஆம் ஆண்டு 577 மில்லியன் ரூபாய், 2024 ஆம் ஆண்டு 300 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் சுமார் 1 பில்லியன் ரூபாய் வரை ஆளும்தரப் நிதி செலவிடப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் ரணில் விக்கிரம சிங்கவை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு பிரதிநிதிகள் குழு 19 ஆளும்தரப்முறை பயணங்களை மேற்கொண்டுள்ளது. இதற்கு 1027 மில்லியன் ரூபாய் வரையில் செலவிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவர்யாக பதவி வகித்த காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு அண்மையில் அறிவித்திருந்தது. பொதுச்சொத்துக்கள் சட்டத்தின் கீழ் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைய முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக செயலாளர் சென்ட்ரோ பெரேராவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று 6 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்திருந்தது.

இதனிடையே முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக இன்று அவர் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

## மீன்பிடிப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகத்தில் முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சும் 'ஸீயிளழிஜ நீஷஷ் ஸிழிஜவழி' திட்டமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நாடு தழுவிய கணக்கெடுப்பு, ஆகஸ்ட் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வைக் குறிக்கும் வகையில், அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோர் மீன்பிடிப் படகுகளில் கணக்கெடுப்புக்கான ஸ்டிக்கர்களை ஒட்டியும், டெப்கணினிகள் (வீழிணுளீலிதுஶ்ரீற்மிளஷவி) மூலம் தரவு முறைமையில் தகவல்களை உள்ளீடு செய்தும் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். பின்னர், பாணந்துறை மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள மீனவ சமூகத்துடன் அவர்கள் சுமூகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்ததாவது:

கடந்த 10 வருடங்களாக இத்தகைய கணக்கெடுப்பு எதுவும் நடத்தப்படாததால், நாட்டில் உள்ள உண்மையான மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை, அவற்றின் தரம் மற்றும் கொள்ளளவு குறித்து சரியான தரவுகள் இருக்கவில்லை. இந்த நிலைமை, மீன்பிடித்துறையை நவீனமயப்படுத்துவதற்கும், மீனவ சமூகத்திற்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கும் பெரும் தடையாக இருந்தது.

இன்று நாம் ஆரம்பித்திருப்பது, முழுமையாக தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு டிஜிட்டல் கணக்கெடுப்பாகும். எமது நோக்கம், நமது நாட்டின் மீன்பிடித்துறையை, பாரம்பரியமாக மீன்பிடிப்பவர்கள் என்ற நிலையிலிருந்து, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய, நாட்டின் பொருளாதாரத்திற்கு டொலர்களை ஈட்டித்தரும், தரமான புரதத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு நவீன தொழில்துறையாக மாற்றுவதே ஆகும். இந்தக் கணக்கெடுப்பின் மூலம், பழுதடைந்த மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட படகுகளை அடையாளம் கண்டு, அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம், 'ஸீயிளழிஜ நீஷஷ் ஸிழிஜவழி' திட்டத்தின் கீழ் நமது கடல் வளத்தைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கிறோம். இந்த தேசிய திட்டத்தை வெற்றிபெறச் செய்ய முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு அனைத்து மீனவ மக்களிடமும் நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்ததாவது:

எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்கும் சரியான தரவுகள் இன்றியமையாதவை. எங்கள் அமைச்சில் இருந்த தரவுகள் பிழையானவை என்பதை நாங்கள் கண்டறிந்தோம். அதனால்தான், இந்தக் கணக்கெடுப்பின் மூலம் ஒரு துல்லியமான தரவுத்தளத்தை (ம்ழிமிழிணுழிவிள) உருவாக்க நாங்கள் முடிவு செய்தோம். இந்த கணக்கெடுப்பு பல கட்டங்களாக நடைபெறுகிறது.

முதலில், வெளி இணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளும், இரண்டாவதாக பலநாள் படகுகளும், மூன்றாவதாக பாரம்பரிய மற்றும் நன்னீர் மீன்பிடி படகுகளும் கணக்கெடுக்கப்படும். 'ஸீயிளழிஜ நீஷஷ் ஸிழிஜவழி' திட்டத்தின் கோரிக்கையான, கடற்கரையில் கைவிடப்பட்ட ஃபைபர்கிளாஸ் படகுகளின் எண்ணிக்கையை அடையாளம் கண்டு, அவற்றை 'சினோர்' (ஸீளதீ-ஹிலிஷ) நிறுவனம் மூலம் மறுசுழற்சி செய்வதும் இதன் மூலம் சாத்தியமாகும்.

மேலும், மீனவ சமூகம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையான காப்புறுதித் திட்டம் இல்லாமையை நிவர்த்தி செய்யும் வகையில், 'சயுர' என்ற பெயரில் புதிய காப்புறுதித் திட்டம் இம்மாதம் 14 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்படும். விபத்தில் உயிரிழக்கும் மீனவருக்கான நட்டஈடு 2 இலட்சத்திலிருந்து 10 இலட்சமாக (ஒரு மில்லியன்) எமது அரசத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தின் மூலமும், சர்வதேசத்துடன் கையாளக்கூடிய, தரவுகளை அடிப்படையாகக் கொண்ட, ஒரு நிலைபேறான மீன்பிடித்துறையை உருவாக்குவதே எமது இலக்காகும்.

இந்தக் கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்படும் அனைத்துத் தகவல்களும், அமைச்சின் புதிய நிகழ்நிலை (லிஜயிஷ்ஜள) தரவு முறைமையில் உள்ளடக்கப்படும் என்பதோடு, 2026 ஆம் ஆண்டு முதல், உரிமப்பத்திரம் வழங்குதல், மானியங்கள் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் இந்தக் கணக்கெடுப்பில் உட்படுத்தப்பட்ட படகுகளுக்கு மட்டுமே வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய முடிவு செய்தது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, வெற்றிகரமான டிஜிட்டல் தீர்வுகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் கிழக்கு மாகாணத்திற்கான பல்துறை மானிய உதவி குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்ட இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கடந்த ஏப்ரல் 5 அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையே பரிமாறப்பட்டன.

மனுதாரர்கள் சார்பாக அரசுத் தலைவர் சட்டத்தரணி மனோகர டி சில்வா மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி கனிஷ்க விதாரண ஆகியோர் ஆஜரானார்கள். சட்டமா அதிபர் சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஷ்வரன் ஆஜரானார்.

## இஸ்ரேலியர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு பிரஜையொருவர் அருகம்பை பிரதேசத்திலிருந்து காணொளியொன்றை வெளியிட்டுள்ளார். தற்போது அருகம்பை இஸ்ரேலில் ஒரு கொலனியாக மாறியிருக்கிறது என்பது வெளிநாட்டவர்களுக்குக்கூடப் புரிந்துள்ளது. நாட்டின் சுற்றுலாத்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் கசாயம் அருந்தியவர்களைப் போன்று இருக்கின்றனர்.

கடந்த ஆட்சி காலத்தில் தற்போதைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பலஸ்தீனுக்கு ஆதரவாக அமெரிக்க தூதரகத்துக் முன்னதாகவே நீண்ட நாட்களைக் கழித்திருக்கின்றார். ஆனால் இன்று அவரிடமிருந்து எந்தச் சத்தமும் இல்லை. மாறாக இஸ்ரேலையும், அமெரிக்காவையும் அரவணைத்துக் கொண்டிருக்கின்றனர். இஸ்ரேலியர்கள் மொசாட்டைப் போன்று இலங்கையில் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய சூழல் காணப்படுகிறது.

இது தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும் என நாம் மீண்டும் மீண்டும் எச்சரிக்கின்றோம். இஸ்ரேலுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்று அரசம் எண்ணுகிறது. அவர்களுடன் உறவாடினால் இலாபத்தை விட பாரிய இழப்பீட்டை செலுத்த நேரிடும் என்பதையும் அரசத்துக்கு நினைவுபடுத்துகின்றோம். இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு வந்து கொலனியமைப்பதற்கு இடமளித்தமைக்காக பின்னர் அனைவரும் வருந்த வேண்டிய நிலைமையும் ஏற்படும்.

எந்த அடிப்படையில் கட்டணமின்றி இஸ்ரேலியர்களுக்கு வீசா வழங்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தீர்மானித்தார் என்பது எமக்கு தெரியாது. இது அமெரிக்காவின் அச்சுறுத்தலா? அல்லது யாருடைய அச்சுறுத்தல் என்பதும் எமக்கு தெரியாது. இஸ்ரேலியர்களுக்கு இலங்கை வர வாய்ப்பளிக்குமாறு அழுத்தம் பிரளோகிக்கப்பட்டிருக்கக் கூடும். இது அமெரிக்காவின் நிபந்தனையாகக் கூட இருக்கலாம். அமெரிக்கா, இஸ்ரேல் என்பவை வெளியுலகுக்கு இரு வேறு நாடுகள் என்ற போதிலும். இன்று அவை இரண்டும் ஒரே நாடுகள் ஆகும். இந்த ஆளும்தரப்பு வெளிநாட்டுக் கொள்கையால் நாட்டுக்கு எதிர்காலத்தில் பாரிய அழிவு காத்திருக்கிறது என்றார்.

## 309 கொள்கலன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

309 கொள்கலன்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள அரசுத் தலைவர்யால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை, அரசுத் தலைவர்க்கு கையளிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் நெருங்குகின்றன. ஆனால் இதுவரை அந்த அறிக்கையை அரசுத் தலைவர் வெளியிடவில்லை. அதேநேரம் விசாரணை அறிக்கையின் பிரகாரம் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் எந்த விசாரணையும் இடம்பெறுவதாக தெரியவில்லை. யாரிடமாவது வாக்குமூலம் பெறுவதையும் காணவில்லை.

அரசுத் தலைவருகு கையளிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் ஆளும்தரப்புக்குப் பாதிப்பான விடயம் என்பதாலே இதனை வெளியிடாமல் இருக்கின்றனர். நாடாளுமன்றத்துக்குக்கூடச் சமர்ப்பிக்கவில்லை. இந்த அறிக்கையில் இருக்கும் சில விடயங்களை நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தபோது, அதனை ஆளும்தரப்த்தில் இருப்பவர்கள் யாரும் மறுக்கவில்லை. அதேநேரம் அந்த அறிக்கையை விரைவாக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தா . ஆனால் இதுவரை அதனைச் சமர்ப்பிக்கவில்லை.

அதேநேரம் நாட்டில் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டபோது ஆளும்தரப்பு வெளிநாட்டில் இருந்து உப்பு இறக்குமதி செய்ய தீர்மானித்தது. அதன் பிரகாரம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உப்பு கொள்கலன்களில் 400 கொள்கலன்கள் விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கொள்கலன்கள் அரசுத் தலைவர் உப்பு இறக்குமதி செய்வதற்கு அனுமதித்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதிக்கு பின்னர் வந்த கொள்கலன்கள் என்பதாலே இவற்றை விடுவிக்காமல் இருப்பதாக சுங்க அதிகாரிகள், குறித்த கொள்கலன்களின் உரிமையாளர்களுக்கு தெரிவித்திருக்கின்றனர். ஆனால் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த 400 கொள்கலன்களில் 6 கொள்கலன்கள் சுங்கத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளன. இது எவ்வாறு முடியும்.? விடுவிக்கப்பட்ட 6 கொள்கலன்களும் யாருடையது என்பதை ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டும்.

அதேநேரம் இவ்வாறு ஆளும்தரப்பு இறக்குமதி செய்த 11 ஆயிரம் மெட்ரிக் தொன்னில் 4 ஆயிரம் மெட்ரிக்தொன் உப்பு, அம்பாந்தோட்டை உப்பு நிலையத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனைய 7 மெட்ரிக்தொன் உப்பு யாருக்கு வழங்கப்பட்டது என எந்தத் தகவலும் இல்லை. இது தொடர்பாக தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கேட்டபோது அதற்கு எந்த பதிலும் இல்லை.

எனவே வெளிப்படைத் தன்மையுடன் ஆட்சி செய்வதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த இந்த ஆளும்தரப்பின் நிர்வாணம் தற்போது வெளிப்பட்டு வருகிறது என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கவனிக்கப்பட வேண்டிய அடித்தளம்

இலங்கை, தனது 'இலவச' (மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப்பணத்தால் நிதியளிக்கப்படும்) பொது கல்வி முறைமை குறித்து பெருமைபேசிக்கொண்டேஇருக்கிறது. விடுதலைக்குபிந்தையகாலத்தில், கோடிக்கணக்கான மக்களை வறுமையிலிருந்து உயர்த்துவதில் இந்தக் கல்வி முறைமையின் பங்கு முக்கியமானது என்பதும் உண்மை. இருப்பினும், பல தசாப்தங்களாகவே இந்த முறைமையின் குறைகள், அமைப்பு சார்ந்த தோல்விகள், மற்றும் செயல்திறன் குறைவுகள் குறித்து வல்லுநர்கள் எச்சரித்துவருகின்றனர். தற்போதைய ஆளும்தரப்பு அறிமுகப்படுத்தவிருக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் கடும் விவாதங்கள் நடைபெறுவது தவிர்க்கமுடியாதது.

ஆனால், கல்வித்துறையில் பெரிதாக பேசப்படாத, ஆனால் மிக முக்கியமான ஒரு பிரிவு, குழந்தையின் ஆரம்பக் கல்வி அல்லது முன்பள்ளிக் கல்வி (Preschool Education) ஆகும். இலங்கையில், இந்த முன்பள்ளிக் கல்வி துறை தளர்வான அமைப்பில் இயங்கி வருவதுடன், பெரும் அளவில் பின்தங்கியதும், வளமற்றதுமான ஒன்றாக உள்ளது.

நேற்று, தேசிய முன்பள்ளி ஆசிரியர்கள் சங்கம், ஆளும்தரப்பு முன்பள்ளிஆசிரியர்களின்பொருளாதாரநலனைப்பாதுகாக்கும்வகையில் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. குறிப்பாக, பல ஆண்டுகள் பணியாற்றிய பின் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கான நலன்கள் மற்றும் உதவிகள் வழங்கப்படவேண்டும் எனவும் அவர்கள் கோரினர். தேர்தல் காலத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளைஅதிகரிப்பதாகஅளிக்கப்பட்டவாக்குறுதிகள்தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் சங்கத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

முன்பள்ளிக் கல்வி என்பது ஒரு குழந்தையின் வளர்ச்சியில் அத்தியாவசியமான படியாகும். இது, தனிநபர் வளர்ச்சியையும், சமூக மற்றும் தேசிய முன்னேற்றத்தையும் தீர்மானிக்கும் ஒரு அடித்தளமாகும். பல முன்னேற்ற நாடுகளில், முன்பள்ளிக் கல்வி மிகவும்திட்டமிட்டும், வளமுடனும், கட்டுப்பாடுகளுடனும்வழங்கப்படுகிறது. ஆனால் இலங்கையில், ஒருங்கிணைந்த அரசுக் கொள்கை இல்லாத காரணத்தால், முன்பள்ளிகளின் தரம் பிராந்தியத்துக்கு பிராந்தியம் மாறுபட்டு, சமமற்ற கல்வி வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

அதிகாரிகளின் தகவல்படி, நாட்டின் 34,000 முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களில், வெறும் 6,000 பேருக்கு மட்டுமே டிப்ளோமா தகுதி உள்ளது. நாட்டில் உள்ள 18,800 முன்பள்ளிகள் தனியார், அமைப்புகள், மாகாண சபைகள், முன்னணி பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளுடன் இணைந்தவை என ஐந்து வகைப்படுகின்றன. 2024ஆம் ஆண்டு யூனிசெஃப் அறிக்கையின்படி, முன்பள்ளிக் கல்வி பெற வேண்டிய குழந்தைகளில் 20% குழந்தைகள் அதற்கான வாய்ப்பை இழந்துள்ளனர்.

இலங்கையில் பெரும்பாலான முன்பள்ளிகள் தனியார் உரிமையிலும் மேலாண்மையிலும் இயங்குவதால், ஏராளமான பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுக்கு முன்பள்ளிக் கல்வி அளிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. மேலும், இப்பள்ளிகள் பெரும்பாலும் கட்டுப்பாடின்றி, தரநிலைகளின்றி இயங்குகின்றன. வளங்களும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களும் இல்லாததால், பாடத்திட்டத்தின் உள்ளடக்கமும், தரமும் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இல்லாமல் போகின்றன.

யூனிசெஃப் குறிப்பிட்டதாவது, முன்பள்ளி ஆசிரியர்களில் வெறும் 39% பேருக்கு மட்டுமே குறைந்தது ஒரு வருட தொழில்முறை பயிற்சி கிடைத்துள்ளது. அவர்களின் பணிப்பருவ நிலைமைகள், ஆரம்ப அல்லது இரண்டாம் நிலைக் கல்வி ஆசிரியர்களின் நிலைமைகளை விட மிகக் குறைவானது. மேலும், முன்பள்ளிப் பாடத்திட்டங்கள் முழுமையானதாக இல்லாமல், பாதுகாப்பான குடிநீர் அருந்துதல், கைகளைகழுவுதல்போன்றநல்லபழக்கவழக்கங்களைஊக்குவிப்பதில் குறைவாக உள்ளன. சிறிய தசை இயக்கத் திறன் (fine motor skills), சமூக–உணர்ச்சி (socio–emotional) வளர்ச்சி, மற்றும் அறிவாற்றல் திறன்களை ஊக்குவிக்கும் அம்சங்கள் போதுமான முக்கியத்துவம் பெறவில்லை.

இவ்வாறு, முன்பள்ளிக் கல்வியில் தரநிலைகள், பாடத்திட்டங்கள், நிர்வாக முறைகள் ஆகியவை ஒருங்கிணையாமல், நாடு முழுவதும் குழந்தைகள் தங்கள் முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, ஆரம்பக் கல்வி மேம்பாட்டு தரநிலைகள் (ECDS) நாடு முழுவதும் அமல்படுத்தப்படுவதற்கான ஒருங்கிணைந்த முயற்சி அவசியம் என யூனிசெஃப் வலியுறுத்துகிறது.

இலங்கை, தனது எதிர்கால பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மைக்காக சேவைத்துறையை மேம்படுத்த விரும்புகின்றது எனில், முன்பள்ளிக் கல்விக்கு அரசின் தீவிரமான கவனமும் முதலீடும் அவசியம். சிறுவயது கல்வியை புறக்கணிப்பது, எதிர்கால தலைமுறையின் திறன்களை குறைப்பதோடு, தேசிய முன்னேற்றத்திற்கே தடையாக அமையும்.

எனவே, ஆளும்தரப்பு, முன்பள்ளிக் கல்வியை ஒருங்கிணைந்த கொள்கை, போதுமான நிதி, தொழில்முறை பயிற்சி, மற்றும் தரநிலைகள் மூலம் வலுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இதுவே கல்வித்துறையின் அடித்தளத்தை பலப்படுத்தும் முதல் படியாகும்; அத்துடன், நாட்டின் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்தும் நம்பகமான முதலீடாகும்.

### மூதூரில் படுகொலைசெய்யப்பட்ட

# 'அக்சன் பாம்' பணியாளர்களின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று

திருகோணமலைமூதூர்பகுதியில்படுகொலை செய்யப்பட்ட அக்சன் பாம் (ACF) என்ற நிறுவனத்தில் பணியாற்றிய 17 தொண்டர்களின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று திருகோணமலை மட்டிக்களி லகூன் பூங்காவில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு 19 ஆண்டுகளாகியும் நீதி கிடைக்கவில்லை எனவும் புதிய ஆளும்தரப்பு ஆட்சியிலாவது நீதி கிடைக்க வேண்டும் எனவும் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

2006ம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதியன்று வழமை போல் கடமையின் நிமித்தம் மூதூரில் உள்ள அலுவலகத்துக்குச் சென்றிருந்த பணியாளர்கள் மூதூர் பகுதியில் நிலவிய போர்ச் சூழ்நிலையின் காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் அங்கேயே தங்கியிருந்தனர் எனக்கக கூறப்படுகின்றது. இதன்போது 2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி இந்த படுகொலைச்சம்பவம் இடம்பெற்றது. குறித்த படுகொலைச்சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 17 உள்ளூர் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இப்படுகொலையில்

1. ரிச்சட் அருள்ராஜ் (வயது - 24)
2. முத்துலிங்கம் நர்மதன் (வயது - 23)
3. சக்திவேல் கோணேஸ்வரன் (வயது - 24)
4. துரைராஜா பிரதீபன் (வயது - 27)
5. சிவப்பிரகாசம் ரொமிலா (வயது - 25)
6. கணேஷ் கவிதா (வயது - 27)
7. எம். ரிஷிகேசன் (வயது - 24)
8. அம்பிகாவதி ஜெசீலன் (வயது - 27)
9. கனகரத்தினம் கோவர்த்தனி (வயது - 27)
10. வயிரமுத்து கோகிலவதனி (வயது - 29)
11. ஏ.எல்.மொகமட் ஜௌபர் (வயது - 31)
12. யோகராஜா கோடீஸ்வரன் (வயது - 30)
13. சிங்கராஜா பிறீமஸ் ஆனந்தராஜா (வயது - 32)
14. ஐ. முரளிதரன் (வயது - 33)
15. கணேஷ் ஸ்ரீதரன் (வயது - 36)
16. முத்துலிங்கம் கேதீஸ்வரன் (வயது - 36)
17. செல்லையா கணேஷ் (வயது - 54)

ஆகியோர் கொல்லப்பட்டிருந்தார்கள்.

மூதூர் பொது வைத்தியசாலைக்கு அருகில் இயங்கிவந்த அக்ஷன் பாம் எனும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த மேற்படி 17 பணியாளர்களையும் ஆயுதம் தரித்த சீருடைக்காரர்கள் நிறுவன வளாகத்துக்குள் நுழைந்து நிலத்தில் குப்புறப் படுக்கப்பண்ணி பின்பக்கமாக தலையில் சுட்டு படுகொலை செய்ததாக அன்றைய செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### தரமற்ற ஆன்டிபயடிக் மருந்து வழக்கு;

# நிறுவனத் தலைவரின் பிணை மனு மீது ஓகஸ்ட் 7 கட்டளை

தரமற்ற ஆன்டிபயடிக் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில், தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளை இறக்குமதி செய்த நிறுவனத்தின் உரிமையாளர் சுதத்ஜானகபெர்னாண்டோ தாக்கல் செய்துள்ள பிணை மனு கோரிக்கை தொடர்பான உத்தரவை ஓகஸ்ட் 7 அறிவிக்கவுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தெரிவித்தது.

இந்தப் பிணை மனு மீதான உத்தரவு நேற்று அறிவிக்கப்படுவதாக இருந்தது. இருப்பினும், குறித்த உத்தரவு ஓகஸ்ட் 7 அறிவிக்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்திரிகா காலிங்கவங்ஷ அறிவித்தார்.

இலங்கைக்கு தரமற்ற ஆன்டிபயடிக் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக மூவரடங்கிய மேல் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த நிறுவனத்தின் உரிமையாளர் சுதத் ஜனக பெர்னாண்டோ முதல் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

தான் சுமார் ஒன்றரை வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், தனக்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் பிணை வழங்க மறுத்துள்ளதாகவும் சந்தேகநபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதன்படி, தனது பிணை விண்ணப்பங்களை நிராகரித்து மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை மறுபரிசீலனை செய்து, தன்னை பிணையில் விடுவிக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு அவர் மேல் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# முன்னாள் ராஜாங்க அமைச்சரின் விளக்கமறியல் காலம் நீடிப்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர உட்பட 03 சந்தேகநபர்களையும் ஓகஸ்ட் 18 வரை தொடர்ந்தும் விளக்கமறியலில்வைக்குமாறு மஹர நீதவான் காஞ்சன சில்வா நேற்று உத்தரவிட்டார்.

மேல்நீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்ட பிணை மனுவை பரிசீலிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் எதிர்வரும் 21ஆம் திகதி தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

கிரிபத்கொடை பகுதியில் அரசத்திற்கு சொந்தமானகாணியைபோலிபத்திரங்களைத் தயாரித்து விற்பனை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

# இஸ்ரேலின் போர் ஆயுதமாக உணவு காசாவில் தொடரும் பட்டினிச் சாவு

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




கடந்த மூன்று வாரங்களில் மட்டும் காசா மீது இஸ்ரேல் நடத்திய கொடூர தாக்குதலில் உணவு தேடி வந்த 750க்கும் மேற்பட்ட சிறுவர்கள், பெண்கள் பலியான சோகம் நடந்துள்ளது.

ஆனாலும் தற்போது காசாவில் போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அழைப்பு விடுத்திருந்தார். ஹமாஸ் இயக்கத்தினரின் பிடியில்உள்ளபணயக்கைதிகள்விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.



அதிபர் டிரம்ப் பதவியேற்றவுடன் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே 8 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, மீண்டும் சண்டை தொடங்கியது. இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் கொண்டுவர டிரம்ப் மேற்கொள்ளும்முயற்சி வெற்றிபெறவில்லை.

கடந்தமாதம்இஸ்ரேல்பிரதமர்பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்கா சென்றார். இஸ்ரேல் அதிகாரி ஒருவர் தெரிவித்ததன் படி, போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படும் என்று கருதப்பட்டது.

இந்நிலையில் காசாவில் இஸ்ரேலிய ராணுவம் உணவகம் மற்றும் உணவு தேடி வந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒரு நாளில் மட்டும் 74 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக இஸ்ரேலியப் படைகள் காசாவில் கடலோர விடுதியில் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 30 பேர் கொல்லப்பட்டனர், மேலும் போரினால் பாதிப்பட்ட பாலஸ்தீனியர்கள், தங்களுக்கு தேவையான உணவு உதவியைப் பெற முயன்றபோது துப்பாக்கிச் சூட்டில் 23 பேர் கொல்லப்பட்டனர் என்று அங்குள்ள சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இன்னுமோர் 'நக்பா' ?

2023 அக்டோபரில் இருந்து உணவு மற்றும் மனிதாபிமான பொருட்களை கொண்டு செல்லும் அனைத்து வழித்தடங்களையும் காசாவில் அடைத்துவிட்டு 77 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு காஸா மீது மூர்க்கத்தனமான தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் நடத்தி வருகிறது.

கையில் இருந்தவற்றை எல்லாம் இழந்துவிட்டு பாலஸ்தீனிய மக்கள், பசி கொடுமையால் இப்படி கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர். காஸாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பிணை கைதிகள் அனைவரையும் விடுவிக்கும் வரை போர் ஓயாது என்று சூளுரைத்துள்ள இஸ்ரேல், அகதிகள் முகாம், மருத்துவமனைகள், குடியிருப்புகள் என அனைத்து பகுதிகளையும் குறிவைத்து தாக்குதல் நடத்தி கொண்டு இருக்கிறது.

காஸாவில் இருக்கும் முப்பது வீதமான குழந்தைகள் ஊட்டச் சத்து குறைபாட்டில் இருக்கின்றன. ஐந்து வயதுக்குட்பட்ட 71,000 குழந்தைகள், பட்டினியால் நலிவடைந்து கொண்டு இருப்பதாக ஐ.நா. கூறுகிறது. கர்ப்பிணிகளும் பிறந்த சில மாதங்களே ஆன குழந்தைகளும் உணவு கிடைக்காமல் மரணத்தின் விளிம்பில் இருக்கின்றனர்.

## இஸ்ரேலின் பழிக்குப் பழி :

கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு பழி தீர்ப்பதாக கூறி காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போர் இலட்சக்கணக்கான பாலஸ்தீனியர்களை பசி, பட்டினியில்தள்ளி உள்ளது. ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் இஸ்ரேல், காஸா போருக்கு 60,000 பாலஸ்தீனியர்களும் 1,500இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டு விட்டனர்.



இன்னும்ஓர் 'நக்பா' போன்று பட்டினியால் பாலஸ்தீன மக்களை படுகொலை செய்ய இஸ்ரேல் முயன்றுள்ளது. இதற்காகவே காஸாவில் அத்தியாவசிய, மனிதாபிமான பொருட்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் பட்டினியால் உயிரிழந்துள்ளனர். அத்துடன் பசியால் இருபது இலட்சம் மக்கள் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

இதனிடையே காசாவுக்கு உணவுப் பொருட்களை அனுப்பாவிட்டால் பல்லாயிரம் குழந்தைகள் உயிரிழக்க நேரிடும் என்று உலக நாடுகளுக்கு ஐ.நா. இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.

## இஸ்ரேலுக்கு உலகளாவிய கண்டனம்:

இஸ்ரேலின் கொடூரமான நடவடிக் கைகளுக்கு பல உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. காஸா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள புதிய நில அடிப்படையிலான போர் நடவடிக்கைகள் உலகளவில் கடும் விமர்சனங்களை சந்தித்து வருகின்றது.

உள்நாட்டிலேயேபோருக்குஎதிராகயூதமக்கள்எழுந்துள்ளமையால், இஸ்ரேல் அரசு ஆட்டம் கண்டுள்ளது. காஸாவில் இஸ்ரேலின் போர் ஒரு புதிய, வன்முறை கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இஸ்ரேலுக்குள்ளேயே இந்தப் போருக்கு எதிராகவும், அது நடத்தப்படும் விதம் குறித்தும் உள் நாட்டிலேயே குரல்கள் வலுத்து வருகின்றன. இந்த அதிர்ச்சி தரும் விமர்சனங்கள், உள்நாட்டில் ஒரு பெரும் விவாதத்தை கிளப்பியுள்ளன.

தற்போது உள்நாட்டிலேயே போர் குறித்த விமர்சனங்களும், அதன் நடத்தப்படும் விதம் குறித்த கேள்விகளும் எழுந்துள்ளன. இது, இஸ்ரேலிய சமூகத்தில் போரின் தாக்கம் மற்றும் அதன் எதிர்காலம் குறித்து ஆழமான கவலைகள் அதிகரித்து வருவதைக் காட்டுகிறது. இந்தப் புதிய குரல்கள், இஸ்ரேலிய அரசியல் மற்றும் சமூகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.



# வெளிநாட்டு முதலீட்டு வரம்பை அதிகரிப்பது குறித்து ஆராய்வு

வெளிப்புற முதலீடுகள் குறித்த புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள், உள்ளூர்நிறுவனங்கள்வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கான அதிகரித்த வரம்புகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் எல்லை தாண்டிய விரிவாக்கத்தை எளிதாக்குவதற்கான செயல்முறைகளை நெறிப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டளை குறித்து அரசநிதி பற்றிய குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் 2025.06.18ஆம் திகதியிடப்பட்ட 2441/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறித்த கட்டளை வெளியிடப்பட்டுள்ளது.

அரச நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா தலைமையில் 2025.07.29 அன்று நாடாளுமன்றத்தில் கூடியபோதே இவ்விடயம் ஆராயப்பட்டது.

இதற்கமைய பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் முதலீட்டுக்கான எல்லை 500,000 அமெரிக்க டொலரிலிருந்து 750,000 அமெரிக்க டொலர் வரையில் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன், பட்டியலிடப்படாத கம்பனிகளுக்கான முதுலீட்டுக்கான எல்லை 150,000 அமெரிக்க டொலரில் இருந்து 200,000 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த எல்லைக்கு அப்பால் முதலீடு செய்ய விரும்பும் நிறுவனங்கள் இப்போது வெளிநாட்டு மூலங்களிலிருந்து 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையான கடன் வாங்க முடியும் என்பதுடன், மத்திய வங்கி மேற்பார்வையுடன், 2 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலான முதலீட்டைச் செய்வதற்கு விசேட அனுமதி தேவைப்படும்.

வெளிப்புற முதலீடுகளுக்கான நிதி இலங்கையிலிருந்து மாற்றப்பட முன்னர் அவை வெளிமுக வெளிநாட்டுக் கணக்குகள் ஊடாகக் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்கு இந்தப் பரிவர்த்தனைகளை விரைவாக எளிதாக்குவதற்கான பொதுவான அனுமதியை வழங்கியுள்ளது.

இதனால் நிறுவனங்கள் தேவையற்ற தாமதங்கள் இல்லாமல் வாய்ப்புகளை அணுக முடியும்.

இந்தத் திருத்தங்கள் இலங்கை வணிகங்களை, குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் துறைகளில், மூலதனப் போக்குகளைக் கண்காணித்து உலகளாவிய விரிவாக்கத்தைத் தொடர ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன என இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

முன்னைய கட்டுப்பாடுகள் சில நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயரத் தூண்டுகின்றன என்ற பின்னணியிலேயே இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதிகள், குறுகியகால விநியோகக் கடன்கள் மேலதிக கட்டுப்பாடுகள் இல்லாமல், நடைமுறைக்கணக்குப் பரிவர்த்தனையாக வகைப்படுத்தப்படும் என்று உறுதியளித்தனர்.

அத்துடன், 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் 2025.06.30ஆம் திகதியிடப்பட்ட 2443/14ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் குழுவில் நீண்டநேரம் விவாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டன.

வாகன இறக்குமதி தொடர்பான சர்வதேச கடன் உறுதிப்பத்திரம் (ளீஷலிவிவி-ணுலிஷ-ளஷஸிளீ) மற்றும் பதிவு நீக்கத் தேவைகளையும் குழு ஆய்வு செய்தது.

மேலும் சீட்டாட்ட தொழில் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை மற்றும் இலத்திரனியல் வணிகத் தளங்களுக்கான வரிவிதிப்புத் தொடர்புடைய விடயங்களில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் குழு கேட்டறிந்தது. 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் 35ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதியை மறுபரிசீலனை செய்வதன் மூலம், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் புதிய கட்டமைப்பின் கீழ் சர்வதேச கடன் வாங்குவதற்கான தடையற்ற அணுகலை இனி கொண்டிருக்காது.

திறைசேரியிலிருந்து இறையாண்மை உத்தரவாதங்களுக்குத் தகுதிபெற சர்வதேச நாணய நிதியம் அறிமுகப்படுத்தியுள்ள அடைவுமட்டங்களை அவை பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த வழிமுறை கடன் வழங்குபவர் வட்டி விகிதங்களுக்கு கூடுதலாக கடன் இடர் மீதான அடிப்படைகளைத் தீர்மானிப்பதுடன், அரச சார்பு நிறுவங்களின் நிதி ஒழுக்கத்தை ஊக்குவிக்கும் அதே வேளையில் கடன் வாங்குவதை அதிக விலை கொண்டதாக ஆக்குகின்றது.

அதிகாரிகள் மேலும் தெரிவித்ததாவது, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின்படி, இலங்கை தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.5% அளவில் கடன் பெறும் வரம்புக்குள் செயல்பட்டு வருகிறது. இதில் ஏற்கனவே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 5% பயன்படுத்தப்பட்டுவிட்டதால், எதிர்கால வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியளித்தலுக்காக மீதமுள்ள கடன் பெறும் திறன் 2.5% மட்டுமே உள்ளது.

மேலும், குழு உறுப்பினர்கள் யக்ஷும் வாகன விவகாரம் தொடர்பாகவும் கேள்விகள் எழுப்பினர். இவ்விவகாரத்தில், 1,000-க்கும் மேற்பட்ட கார்கள் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், இந்த நிலையில் நாட்டின் முக்கியமான நிறுவனங்களில் ஒன்றுக்கு எதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து குழுவின் தலைவர் அதிகாரிகளிடம் வினவினார்.

சுங்க வரிகள் இயந்திரக் கொள்ளளவின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்ற நிலையில் வாகனங்களின் இயந்திரக் கொள்ளளவைக் குறைத்துக் காண்பித்து வரிவிலக்கு பெற முயற்சித்திருக்கும் சந்தேகத்திற்கு உட்பட்டு தற்போது விசாரணை நடந்து வருகிறது என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏனெனில், விசாரணைகள் தொடரும் அதேவேளையில், சாத்தியமான இராஜதந்திர தாக்கங்கள் குறித்துக் குழுவின் தலைவர் கவலை தெரிவித்தார். சர்வதேச அளவுகோல்களை பூர்த்தி செய்யாத உள்ளூர் விசாரணைகளை விட சர்வதேச தரங்களைப் பயன்படுத்துமாறு அதிகாரிகளை வலியுறுத்தினார்.

சீட்டாட்ட தொழில் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலத்தில் முன்மொழியப்பட்ட மேம்பாடுகள் குறித்தும் குழு ஆராய்ந்தது.

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தும் கட்டமைப்புக்குள் கொண்டுவர வேண்டும் என்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலத்திரனியல் வர்த்தகத் தளங்கள் மீதான வரிவிதிப்புக் குறித்த விவகாரம் தீர்க்கப்பட்டிருப்பதாக குழுவில் ஆஜராகியிருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

எச்.எஸ் குறியீட்டின் அடிப்படையில் வரி அறவீட்டுக்குப் பதிலாகப் பழைய முறையின் அடிப்படையில் வரி அறவீட்டுக்குச் சென்றமையால் முன்னர் காணப்பட்ட காலதாமதங்கள் நிவர்த்தி செய்யப்பட்டிருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்தக் கூட்டத்தில் பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, சட்டத்தரணி ரவூப் ஹக்கீம், (கலாநிதி) கௌசல்யா ஆரியரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2025இல் வெளியிடப்பெற்றது